Enrich, XV (I): 1 - 4, July - Dec., 2023

# சங்க இலக்கியத்தில் பகிர்தல் அறம்

[1]சு. காளீஸ்வரி, [2]முனைவர் ச. மல்லிகா
[1]முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண் : 21212014022009
முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி
(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது)
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி
[2]நெறியாளர் & இணைப்பேராசிரியர்
முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

**முன்னுரை**

சங்க இலக்கியங்கள் வாழ்ந்து சிறந்த தமிழர்களின் வரலாற்றை எடுத்துரைக்கும் பெருமை உடையன. அக்கால மக்களின் அரசியல், பொருளாதாரம், சமுதாய நிலை போன்றவற்றை அறிய உதவும் வரலாற்றுக் கருவூலம். போரும் வீரமும் மட்டுமின்றி ஈகையும் கொடையும் பற்றிப் பேசுகின்ற இலக்கியப் பெட்டகம். சங்ககால மக்கள் அறநெறியில் தங்கள் வாழ்வினை வாழ்ந்துள்ளனர் அவ்விலக்கியங்கள் பல்வேறு அறங்களை எடுத்துக்காட்டி நிற்கின்றன. அவ்வறங்களில் பகிர்தல் அறம் மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது. பிறருக்குக் கொடுத்து தானும் மகிழ்வது பகிர்தல் அறத்தின் முதன்மை பண்பு. சங்க காலத்தில் பகிர்தல் அறம் மக்களிடையே விரவி காணப்பட்டது. அவ்வறத்தினை சங்க இலக்கியங்கள் வழி எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கம்.

**சங்ககாலமக்களின் வாழ்வியல்**

சங்க கால மக்கள் அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப் பொருளினை மையமாகக் கொண்டு வாழ்ந்தனர். நான்கினுள் அறமே முதலிடம் வகிக்கிறது. அறத்தின் வழி பொருளீட்டி அதன் மூலம் இன்பம் பெறுவதே அவர்கள் வாழ்வில் இன்றியமையாத செயலாகத் திகழ்ந்தது. சங்க மக்கள் வாழ்க்கையை அகம், புறம் என இரண்டாக வகுத்து வாழ்ந்துள்ளனர். அகவாழ்விலும் புறவாழ்விலும் அறத்தினை முதன்மையாகக் கொண்டு செயல்பட்டனர். இல்லறம் மற்றும் புறவாழ்விலும் பகிர்ந்தல் அறம் சிறப்புற்றிருந்தது. அகம், புறம் என இரண்டிலும் அறத்தினை மேம்படுத்தி வாழ்வை வாழ்ந்துள்ளனர்.

**அன்பைப் பகிர்தல்**

இல்லறம் என்பது ஒத்த மனம் கொண்ட தலைவனும் தலைவியும் அன்பில் கலந்து இன்ப வாழ்வு வாழ்வது. இல்லறத்திற்கு மிக முக்கியமானவை அன்பு. தலைவன், தலைவி இருவரும் அன்பை ஒருவருக்கு ஒருவர் பகிர்ந்து கொண்டால் தான் இல்லறம் நல்லறமாக அமையும். இல்லறத்திற்கு அன்பைப் பகிர்தல் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஓர் ஆடையை பகிர்ந்து உடுத்தும் வறுமை நிலையிலும் மனம் ஒன்றி அன்பை பரிமாற்றிக்கொண்டு வாழும் வாழ்வினை

**“ஒன்றன் கூறாடை யுடுப்பவரே யாயினும்**
**ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை”** (கலித்-18 )

என்று கலித்தொகை பாடல் வரிகள் எடுத்துரைக்கிறது. மனம் ஒன்றிய அன்பே இல்லறத்திற்கு அடிப்படை என்பதை உணர்த்துகிறது. இதனை வள்ளுவர்

**“அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாள் ஆர்வலர்**

**புன்கணீர் பூசல் தரும”** ( குறள் - 71 )

என்று கூறுகிறார் பிறர் துன்பத்தைக் கண்டு வாடுவதும் அன்பைப் பகிர்வதற்குச் சமமாகும். அன்பை பகிர்தல் என்பது இல்லறத்திற்கு மட்டுமின்றி பிற அஃறிணை உயிரினங்களிடம் அன்பை செலுத்துவதும் அறமாகக் கருதப்படுகிறது.

**விருந்தோம்பல்**

தமிழ் மக்களின் பண்பாட்டில் மிக முக்கிய அறம் விருந்தோம்பல். மனிதன் எதைக் கொடுத்தாலும், போதும் என்று கூற மாட்டான் ஆனால் உணவு மட்டும் வயிறு நிறைந்ததும் போதும் என்று கூறும் உணர்வினை அளிக்கிறது. ‘போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து’ என்ற பழமொழியை உணர வைப்பது உணவேயாகும். சங்க கால மக்கள் விருந்தோம்பும் பண்பில் சிறந்து விளங்கினர். வீட்டிற்கு வரும் விருந்தினருக்கு, தங்களுக்கு உணவில்லை என்றாலும் கூட வந்தவர்களுக்கு உணவு அளிக்கும் பண்பினைப் பெற்றிருந்தனர். தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படை தனித்து உண்ணாமை. அமிர்தமே கிடைத்தாலும் தாமே உண்ணாது பிறருக்கும் கொடுப்பர் நல்லலோர். அத்தகையோரால் தான் இவ்வுலகம் நிலைத்திருக்கிறது.

**‘‘அமிர்தம் இயைவதாயினும் இனிது எனத்**

**தமியர் உண்டாலும் இலவே’’** ( புறம் - 1 )

என்று புறநானூறு விருந்தோம்பல் பண்பினை சிறப்பித்துக் கூறுகிறது

**‘‘குரல் உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து**

**சிறிது புறப்பட்டன்றோ இலரே’’** ( புறம் -333 )

தானியம் ஏதும் இல்லாத நிலையில், விதைக்காக வைத்திருந்த திணையை உரலிலிட்டு குத்தியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்த செய்திகளை சங்கப் புறப்பாடல் தெரிவிக்கின்றது.

**ஆறிவைப் பகிர்தல்**

சங்ககாலப் புலவர்கள் தங்களின் அறிவாற்றலை பகிர்ந்து அளித்துள்ளனர் யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பது போல் புலவர்கள், ஆசான்கள் தங்களுக்குத் தெரிந்த கலைகளை தங்களை நாடிவரும் சீடர்களுக்கு கற்றுத் தந்துள்ளனர். மேலும் புலவர்கள் மன்னவர்களை நாடிச் சென்று அறிவால் வளர்த்த கலையை அழியாதபடி காக்கவும் செய்துள்ளனர்.

சான்றோர் பலர் ஊர்தோறும் இருந்தள்ளனர். அவர்களிடத்தில் தன் பிள்ளைகளை அனுப்பிக் கற்கச் செய்யும் மேன்மை சங்ககாலத்தில் இருந்துள்ளது.

**“சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே”** ( புறம் - 312 )

என்ற பாடலடி கல்விச் சிறப்பினை உணர்த்துகிறது. மேலும்

**“ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச்**

**சான்றோன் பலர் யான் வாழும் ஊரே”** (புறம் - 191 )

என்ற பாடலடி மூலம் சான்றோர்அவை ஊர்தோறும் இருந்துள்ளதையும் தன்னை நாடி வருபவர்களுக்கு கல்வி, கேள்விகளை கற்றுக்கொடுத்ததையும் அறிய முடிகிறது.

அவர்களின் பகிர்ந்து அளித்தல் பண்பின் மூலம் இன்றைய காலம் வரை பல கலைகளும், மருத்துவ முறைகளும் அழியாமல் வாழ்ந்து கொண்டு இருக்கின்றது. கல்வி கற்றல் ஒரு மனிதனை மேம்படுத்த உதவும். கல்வி என்பது பாடம் மட்மின்றி கலை, போர்ப்பயிற்சி போன்ற அனைத்துமாகும். கற்கக்கூடிய அனைத்து கல்வியையும், அறிவையும் சங்ககால மக்கள் தங்களுள் பகிர்ந்தே வாழ்ந்துள்ளனர் என்பதை இலக்கியங்கள் வழி அறிய முடிகின்றது

**ஈகை அறம்**

ஈகைக்கும், கொடைக்கும் சிறு வேறுபாடு காணப்படுகின்றது. ஈகையானது உணர்வுபூர்வமாக செயல்படுவது. கொடையானது அறிவுப்பூர்வமாக எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் வழங்குவது. ஈகையில் சிறந்தவர் கடை ஏழு வள்ளல்கள் அவர்களுள், பாரி, பேகன் இருவரும் ஈகையில் தலை சிறந்தவர்களாகத் திகழ்ந்தள்ளனர்,

**"சிறு வீமுல்லைக்குப்பெருதேர்நல்கிய"** (சிறு.பாண் - 89 )

**"கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய"** (சிறு.பாண்– 85 )

அஃறிணை உயிர்களிடத்தும் தங்கள் அன்பினை செலுத்தி ஈகைப் பண்பில் சிறந்து விளங்கியுள்ளனர். பிறர் துன்பத்தைத் தன் துன்பம் போல் எண்ணி பிறருக்காக உதவி செய்வதே ஈகை அறமாகும்.

**வற்றாத வள்ளண்மை**

உலகாண்ட அரசர்கள் மட்டுமின்றி புலவர்களும் ஈகைப் பண்பில் சிறந்தவர்களாகத் திகழ்ந்துள்ளனர். குமண வள்ளலைப் பாடி பரிசில் பெற்றுத் திரும்பிய பெருஞ்சித்திரனார் தம் மனைவியை நோக்கி பாடிய பாடல்

**"இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது**
**வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்**
**எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழவோயே"** (புறம்-163)

இப்பொருளை வைத்து நெடுநாள் வாழ்வோம் என எண்ணாது, வேண்டாதவர் என யாரையும் வெறுக்காது என்னையும் வினவாது இப்பெரும்செல்வத்தை, இல்லை என்று கூறும் அனைவருக்கும் வழங்குவாயாக என்று கூறுகிறார்.

தன் வறுமைக்காகப் பெற்ற பரிசிலைக் கூட பிறருக்குப் பகிர்ந்து கொடுத்து தானும் வாழ வேண்டும் என்ற எண்ணத்தில் மன்னர்களையெல்லாம் மிஞ்சிய கொடைப் பண்பு உடையவராகத் திகழ்கிறார் புலவர் பெருஞ்சித்திரனார்.

**பாதீடு**

சங்க காலம் போர்கள் நிறைந்த காலம் போர் புரியும் முன் அங்குள்ள பெண்கள், குழந்தைகள் விலங்குகளைப் பாதுகாப்பான இடத்தில் அமர்த்துவது முதன்மையான போர் அறமாகக் கருதப்பட்டது. சங்ககால மக்களின் முதன்மைச் செல்வங்களாக விளங்கியவை கால்நடைகளேயாகும். அத்தகு கால்நடைகளைக் கவர்ந்து வருதல் புறத்திணையில் அடங்கும். அவ்வாறு கவர்ந்து வந்த ஆநிரைகளைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொண்டனர். இதனைப் பாதீடு என இலக்கியங்கள் இயம்புகின்றன.

**"தந்துநிறை பாதீடு உண்டாட்டு கொடையென"** (தொல்- பொருள்- 61 )

என்ற தொல்காப்பிய நூற்பா பாதீடு எனும் பகிர்ந்து கொள்ளும் பண்பினை உணர்த்துகின்றது. ஆவினங்களை மட்டுமின்றி வேட்டையாடிய விலங்குகள், மீன்கள், உணவுப்பண்டங்களையும் தம் குடிகளோடு பகிர்ந்து கொண்டனர்.

**"வில்லின் தந்த வெண்கோட்டு ஏற்றை**
**புனைஇருங் கதுப்பின் மனையோள் கெண்டி**
**குடிமுறை பகுக்கும்"** ( நற் - 336 )

என்ற பாடலடிகள் கானவன் வேட்டையாடிய பன்றியைத் தலைமகள் தன் சுற்றதாருக்கு பகிர்ந்து கொடுத்த செய்தியைக் கூறுகிறது.

**"குறுங்கண் அவ்வலைப் பயம் பாராட்டி**
**கொழுங்கண் அயிலை பகுக்கும் துறைவன"** (அகம் - 70 )

மீன் வேட்டையில் கிடைத்த மீன்களைத் தம் சிறிய குடியில் உள்ள அனைவருக்கும் பகிர்ந்து கொடுக்கும் நெய்தல் நிலத்து பகிர்தல் பண்பினை இப்பாடல் அடிகள் எடுத்துரைக்கின்றன. அதுமட்டுமின்றி போரில் வெற்றி பெற்ற மன்னன் வெற்றியின் புகழை வீரர்களின் மீது பகிர்ந்து கொள்வதும் பகிர்தல் அறத்தில் தலை சிறந்த அறமாகக் கருதப்டுகிறது.

**நிறைவுரை**

சங்ககாலம் அறக்கூறுகள் நிறைந்த பொற்காலம். அறப்பண்புகள் சங்க இலக்கியம் முழுவதும் பரவிக் காணப்படுகின்றன. பகிர்ந்து வாழ்தல் எனும் அறம் அம்மக்களிடம் முக்கிய பங்கினை வகித்துள்ளது. அன்பைப் பகிர்ந்து இல்லறத்தை நல்லறமாக வாழ்ந்துள்ளனர். அஃறிணை உயிர்களிடத்தில் அன்பை பகிர்ந்து ஈகையில் சிறந்தவராகத் திகழ்ந்துள்ளனர். புலவர்கள், ஆசான்கள் போன்றோர் அறிவைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுத்து மேன்மக்களாய் வாழ்ந்துள்ளனர். சங்க மக்களிடம் காணப்படும் விருந்தோம்பல் பகிர்தல் அறத்திற்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டாகும். போரிலும், பெற்ற செல்வத்தையும் புகழையும் பகிர்ந்து கொடுத்து பல்லுயிர் ஓம்பி வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள் சங்ககால மக்கள். சங்க இலக்கியங்கள் அம்மக்களின் பகிர்தல் அறத்தினை சிறப்பாக வெளிக்காட்டுகின்றன.

**துணைநூற்பட்டியல்**


1. சங்கஇலக்கியம் மூலமும் உரையும் தொகுதி-6 கலித்தொகை அண்ணாமலை.சுப வர்த்தமானன் பதிப்பகம் 21, ராமகிருஷ்ணா தெரு சென்னை -17, முதல்பதிப்பு-2003

2. சங்கஇலக்கியம் மூலமும் உரையும் பத்துப்பாட்டு சுப்பிரமணியன்ச.வே (உ.ஆ) வர்தமானன் பதிப்பகம் 21, ராமகிருஷ்ணா தெரு, சென்னை 17, முதல் பதிப்பு- 2003

3. சங்க இலக்கியம் மூலமும்உரையும் தொகுதி -10 புறநானூறு இளங்குமரன் (உ. ஆ) வர்த்தமானன் பதிப்பகம் சென்னை -17 முதல் பதிப்பு- 2003

4. திருக்குறள்விளக்கம் வளவன்அரசு (உ.ஆ) சூர்யாபதிப்பகம், 41,த.மு. கட்டடம், திருநெல்வேலி – 01

5. தொல்காப்பியம் பொருளாதிகாரம் இளம்பூரணனார் (உ.ஆ) சாரதா பதிப்பகம், சென்னை – 14 முதல் பதிப்பு- 2005